DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 49/2025**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சுருளியப்பன் | Father Name – பாண்டி | |
| Age | 51 | Village – | தேவாரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வழக்குரை சொத்து தே.ரங்கநாதபுரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்தை சேகர் 4 ஆவணங்கள் மூலம் வாங்கினார் என்றும், நான் சேகரிடமிருந்து ஒரே ஆவணம் மூலம் வாங்கினேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சேகர் 2008ம் ஆண்டு 3 ஆவணங்கள் மூலமாகவும் 2012ம் ஆண்டு மற்றொரு ஆவணம் மூலமாகவும் வழக்குரை சொத்தை வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி சரியாக நியாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரைய பத்திரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது, 3வது லக்க சொத்தில் 48 செண்ட் மட்டும் தான் நான் கிரையம் பெற்றுள்ளேன், அதனால் அந்த கிரைய பத்திரம் 1ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது.

2. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக வழக்குரை சொத்துக்களில் 1ம் பிரதிவாதி தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் 1ம் பிரதிவாதி வழக்குரை சொத்துக்களை ஒத்திக்கு விட்டிருந்தார், அவர்கள் மானாவாரி விவசாயம் செய்து வந்தார்கள். மானாவாரி விவசாயம் என்றால் தண்ணீர் வசதியின்றி மழையை நம்பி செய்யும் விவசாயம் என்றால் சரிதான். வழக்குரை சொத்து விபரத்தில் 3வது லக்க சொத்தின் சர்வே எண்.1045/5ல் 0.02.0 ஏர்ஸ்க்கு செண்ட் 5 உள்ள கிணறு உள்ளது என்றும், அதில் 5HP மோட்டார் உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் வாங்கும்போது 1 HP மோட்டார் தான் இருந்தது, அதன் மூலம் 1ம் பிரதிவாதி சேகரின் கோழி பண்ணைக்கு தான்

தண்ணீர் அளித்து செல்லப்பட்டது.

3. 1ம் பிரதிவாதி 2012ம் ஆண்டு கிரையம் வாங்கிய ஆவணத்தில் வழக்குரை 3ம் லக்க சொத்தில் கிணறும், 5HP மோட்டாரும் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு 13 ஆண்டுகள் 1ம் பிரதிவாதியிடம் ஒத்திக்கு வாங்கியவர்கள் 3வது லக்க சொத்தில் உள்ள கிணற்றை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளவாறு வழக்குரை சொத்துக்களில் நான் கிரையம் வாங்கிய பின்பு போர்வெல் போட்டு விவாசயம் செய்யவில்லை என்றும், நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே வழக்குரை சொத்தில் விவசாயம் நடைபெற்றது என்றால் நான் வாங்குவதற்கு முன்பு மானாவாரி விவசாயம் தான் செய்து வந்தார்கள்.

4. தற்போது வழக்குரை சொத்துக்களில் எத்தனை தென்னை மரம், எத்தனை உளவு மரம் உள்ளது என்றால் உளவு மரங்களை வெட்டிவிட்டு தென்னை மரங்கள் தான் வைத்துள்ளேன், தென்னை மரங்கள் தற்போது 4 வயது. வழக்குரை சொத்திற்கு கொடுக்கப்பட்ட மின்சார இணைப்பு இலவச மின்சார இணைப்பு என்றால் சரிதான். பொதுவாக இலவச மின்சார இணைப்பு வாங்க வேண்டும் என்றால் எவ்வளவு காலம் ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்துக்களுக்கான இலவச மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி சேகர் பெயரில் தான் உள்ளது. இலவச மின்சார இணைப்பை எனது பெயரில் மாற்ற ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஒரு முறை சென்று கேட்டு பார்த்தேன் ஆனால் தற்போது வரை பெயர்மாற்றம் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள இலவச மின்சார இணைப்பின் மூலம் தான் வழக்குரை சொத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறேன் என்றால் சரிதான்.

5. தற்போது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின்சார இணைப்பை என்னை தவிர வேறு யாரும் பயன்படுத்துகிறார்களா என்றால் என்னை தவிர யாரும்

பயன்படுத்தவில்லை, லட்சுமி, பெருமாள் மற்றும் மற்றொரு நபருக்கும் மின்சார இணைப்பில் பங்கு உள்ளது, அவர்களின் சொத்தையும் நான் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்குரை சொத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவரை பிரதிவாதி தடுத்தார் என்று நான் எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். வழக்குரை 1வது லக்க சொத்தில் கிழக்கு நான்குமாலாக காண்பித்துள்ள குதுவல் மற்றும் மேற்கு நான்குமாலாக காண்பித்துள்ள ஒழுகால் பாதையில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

6. 1வது லக்க சொத்தின் தெற்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள புஷ்பம் நிலத்திலும், வடக்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள லட்சுமி நிலத்திலும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 2 வது லக்க சொத்தின் கிழக்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள அயன் குதுவலிலும் மேற்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள ஒழுகால் பாதையிலும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 2வது லக்க சொத்தின் தெற்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள பெரியசாமி நாயுடு பாக நிலம் அமைந்துள்ள பகுதியில் 1ம் பிரதிவாதி எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தின் வடக்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ள 3வது லக்க சொத்து என்பது குப்பம்மாளிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய நிலம் என்றால் சரிதான்.

7. 3வது லக்க சொத்தின் கிழக்கு நான்குமாலாக அயன்குதுவல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு நான்குமாலாக பழனிச்சாமி செட்டியார் வகையறா நிலம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வது லக்க சொத்தின் கிழக்கு மற்றும் வடக்கு நான்குமால்களில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்றால் சரிதான். 1, 2 லக்க சொத்துக்களிலும், 3 வது லக்க சொத்தில் கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு நான்குமால்களிலும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்து விபரத்தில் மேற்கு பக்கம் நான்குமாலாக எங்களது கைவசம் உள்ள எனது பாக நிலம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், 3வது லக்க சொத்தின் மேற்கு

நான்குமாலில் 1ம் பிரதிவாதியின் 10 செண்ட் நிலம் உள்ளது.

8. 1ம் பிரதிவாதி 4 ஆவணங்கள் மூலம் வாங்கிய சொத்தை நான் சேர்த்து ஒரே ஆவணம் மூலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 3வது லக்க சொத்தின் மேற்கு புறம் 10 செண்ட்டை நிறுத்தி கொண்டு தான் 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 3வதுலக்க சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள 10 செண்ட் நிலம் 1ம் பிரதிவாதியினுடையது என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 10 செண்ட் நிலத்திற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் ராணிமங்கம்மாள் சாலை உள்ளது. 3வது லக்க சொத்திற்கு மேற்கு நான்குமாலாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 10 செண்ட் நிலம் வர வேண்டும் என்றால் சரிதான். மேற்படி 10 செண்ட்டில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி 10 செண்ட் நிலத்தில் தென்னை மரம் உள்ளதா என்றால் தென்னை மரங்கள் இல்லை.

9. நான் கிரையம் வாங்கியுள்ள 3 ஏக்கர் 7 செண்ட் நிலத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து எடுத்துக்கொண்டு மீதமுள்ள நிலத்தை 1ம் பிரதிவாதி எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. 3வது லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 26.12.2007ம் தேதி குப்பம்மாளுடன் 1ம் பிரதிவாதி கிரைய உடன்படிக்கை போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 26.12.2007ம் தேதிய கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் 3வது லக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 75 செண்ட் நிலம் என உள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் 3வது லக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 58 செண்ட் மட்டும் தான் இருந்ததால் எனக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் மொத்த விஸ்தீரணம் 58 செண்ட்டாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 27 செண்ட் நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்றும், அதை 1ம் பிரதிவாதி திரும்ப கேட்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 3வது லக்க சொத்தின் மேற்கு நான்குமாலில் மட்டும் தான்

பிரச்சனை இருந்தது என்றும், ஆனால் நான் 3 லக்க சொத்துக்களையும் சேர்த்து 1ம் பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி 3 லக்க சொத்துக்களிலும் என்னை உள்ளே விடாமல் பிரச்சனை செய்து வருகிறார். 3வது லக்க சொத்திற்கான மூலப்பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. 1ம் பிரதிவாதியின் மூல பத்திரத்தில் 1ம் பிரதிவாதி தற்போது பாத்தியப்பட்ட நிலம் 27 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றும், அதை வாங்கி பார்த்தால் இந்த விபரம் எனக்கு தெரியவரும் என்றால் சரியல்ல.

11. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உள்ள பிரச்சனை சம்மந்தமாக தே.ரங்கநாதபுரத்தில் உள்ள பெரியவர்களை வைத்து பேசி பார்த்து முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மூத்த குடிமகன் என்றும், அவருக்கு சில நோய்கள் உள்ளது என்றும், அவர் எந்த காலத்திலும் வழக்குரை சொத்தில் உள்ள பயிர்களை சேதப்படுத்தவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 10 செண்ட்டிற்கு மட்டும் எங்களுக்கு பிரச்சனை இருந்து வரும்நிலலையில் நான் 3 ஏக்கர் 7 செண்ட்டிற்காக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைநிறுத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.11 16:06:13 +0530

District Munsif,
Bodinayakanur.